MCOP.No. 31/2023
Date : 26.06.2025
Witness Name & Rank – சாந்தாமணி – PW1

சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். என் கணவரும் தனியாக இழப்பீடு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எங்களது வாகனம் ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்களது வாகனத்தின் உரிய பதிவு சான்று என் கணவரின் ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் தான் மேற்படி எங்களது வாகனத்தின் ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு சான்று உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
2. என் கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ARS மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் உரிய சிசிச்சை பெற்று மருத்துவர் அறிவுறையின் பேரில்தான் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன் என்றால் சரிதான். எனக்கு நிரந்தர ஊனமே அதனால் வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. எனது வருமான சான்று எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனவே எனக்கு நிரந்தர வேலையோ வருமானமோ இல்லை என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால் சரியல்ல. எனவே 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

.